**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 180/2019</u>**

பெயர் : வேதாச்சலம் P.W.2 Cross .

த/பெ. : கோவிந்தன்

தேதி : 13.11.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:</u> –**

1. தாவா A அட்டவனை சொத்தின் சர்வே எண் மற்றும் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா A அட்டவனை சொத்து 1ம் பிரதிவாதிக்கு எந்த தேதி மற்றும் மாதத்தில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா A அட்டவனை சொத்தினை 1ம் பிரதிவாதி 3ம் நபருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனார் எந்த தேதி மாதம் வருடத்தில் இறந்தார் என்றால் 2008ம் ஆண்டு இறந்தார். தேதி மாதம் நினைவில் இல்லை.

2. தாவா B அட்டவனை சொத்தின் சர்வே எண் மற்றும் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. எந்தெந்த தேதியில் வாதியின்அனுபவத்திற்கு 1ம் பிரதிவாதி இடையூறு செய்தார் என்றால் தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார் அதனால் தேதியை குறிப்பிட்டு கூற இயலாது. வாதியை எனக்கு 10–15 வருடங்களாக தெரியும்.வாதியின் நிலத்தை அவரது தகப்பனார் காலத்திலிருந்து நான் தான் பராமறித்து வருகிறேன். தாவா சொத்துகளை பொறுத்து எனக்கு எந்த விபரமும் என்றாலும், அனைத்து விபரமும் தெரியும் என கூறி வாதிக்கு வேண்டடப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.